## தலைப்பு 290 – கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 290 – கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| கடந்த ஆண்டிற்குரிய அறிக்கையுடனான தொடர்பு | அமுல்படுத்தப்படாதிருந்த பரிந்துரைகள் | இந்த அறிக்கையில் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|
| 2.2(ஈ) | வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணத்தின் சரியான தன்மையை பரீட்சித்தல் | 2.1 |
| 3.1.2(அ) | நீர் கசிவினால் ஏற்பட்டிருந்த பாதிப்பு திணைக்கள நட்டம் மற்றும் இழப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்படாமை. | 3.3 |

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை**

**(அ) காசுப்பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 நவம்பர் 11 ஆந் திகதிய இலக்கம் 05/2023 என்ற அரச கணக்குகள் திணைக்களத்தின் அரச கணக்குகள் வழிகாட்டியின் பந்தி இலக்கம் 7.7 இன் பிரகாரம் 2023 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று காசு மற்றும் குறுக்குப் பதிவுகள் இரண்டும் கவனத்திற்கொண்டு நேர்முறையின் கீழ் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் கடற்தொழிற் மற்றும் நீரியல்வள திணைக்களம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது காசு அடிப்படையில் தயாரித்திருந்தது. | முற்பணக் கணக்குகளில் திணைக்களத்திற்கிடையே கடன் மீதி மாற்றும் போது பரீட்சை மீதியில் ஏற்படுகின்ற தேறிய தாக்கங்கள் பூச்சியமாக இருந்தமையால் வரவு மீதி ரூபா 19,999,828.00 மற்றும் செலவு மீதி ரூபா 23,659,038.00 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. உங்களால் காண்பிக்கப்பட்ட பெறுமதிகள் ஈடுபடுத்தப்பட்ட போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் வேறுபாடுகள் ஏற்படவில்லை. | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ)வைப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இலக்கம் 6000-0-0-16-0-47 என்ற வைப்புக் கணக்கின் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 02 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையே ரூபா 3,043,559 வைப்பும் மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 346,063 வைப்புக்கள் என்பன மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்புக் கணக்கல் உள்ள இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக உரிய நிறுத்திவைத்தல் பணத்தை விடுவிப்பதற்குள்ள இயலுமையினை விசாரணை செய்து உரிய தரப்பினருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக பதில் கிடைத்தவுடன் அந்த பணத்தை விடுவிப்பதற்கோ அல்லு அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களை மீளச் செலுத்துவதற்கோ அல்லது உரித்துக் கோரப்படாதிருக்குமாயின் அந்த மீதிகளை அரசாங்கத்தின் வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | இலக்கம் 6000-0-0-13-0-64 என்ற வைப்புக் கணக்கின் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 02 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையே ரூபா 17,176,464 வைப்பும் மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 8,026,493 வைப்புக்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வைப்புக் கணக்கில் குறிப்பிடும் போது விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடுவதற்குப் பதிலாக தனியார் பெயரில் அல்லது மாவட்ட மீன் பிடி | 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலாவதியான ரூபா 8,026,493 வைப்பு மீதிகளில் ரூபா 205,989 தொகை 2024 மார்ச் மாதம் அரச வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தால் சரியான காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன் 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களை மீளச் செலுத்துவதற்கோ அல்லது உரித்துக் கோரப்படாதிருக்குமாயின் அந்த மீதிகளை அரசாங்கத்தின் வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறே பணத்தை வைப்புச் செய்வதற்குரிய காரணம் குறித்துரைத்த ரீதியில் குறிப்பிடப்படல் வேண்டும். |

அலுவலகத்தின் பெயரில் பணம் வைப்புச் செயய்ப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டமையால் பணம் வைப்புச் செய்வதற்குரிய காரணம் குறிதத்ரைத்த ரீதியில் இனங்காண முடியாதிருந்தது.

## (ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நன்னீர் ஊக்குவிப்பு கடன் உத்திதேசத் திட்டத்தில் அரசாங்கத்திற்காக வட்டி சலுகை செலுத்துதல் வட்டி உதவி செலுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்காக திணைக்களத்திற்க அதிகாரம் கையளிக்கப்பட்ட போதிலும் இந்தக் கடன் முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் கடன் வசதிகள் பெற்ற ஒரு மீனவர் கடன் வழங்கப்பட்ட திகதி, கடன் தவணைப் பணம் செலுத்தி பூர்த்தி செய்யும் திகதி மாதாந்தம் செலுத்த வேண்டிய வட்டி உதவி போன்ற கொடுப்பனவு விபரங்கள் தனித்தனியாக இனங்காண்பதற்கு முடியுமான வகையில் பதிவேடுகள் மற்றும் தரவு கோவையொன்று பேணிச்செல்வதற்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்று ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 11,996,398 தொகையையும் உள்ளடக்கிய 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இலங்கை வங்கிகிக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 300 மில்லியனுக்கு மேற்பட்ட வட்டி உதவியில் சரியான தன்மையை | நன்னீர் ஊக்குவிப்பு கடன் உத்தேசத் திட்டத்தின் கீழ் இருக்கின்ற சகல கடனாளிகளினதும் தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையொன்று திணைக்களத்தால் பேணிச் செல்லப்படா திருந்ததுடன் அதன் மூலம் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளான நிலைமையினை தீர்த்து வைப்பதற்காக திணைக்களம் இதன் பிரகாரம் இனங்காணப்பட்ட கடன் கொத்தோரின் நிலுவைத் தவணைப் பணம் மற்றும் கடன் தொகையினை அறவிடுதலை விரைவுபடுத்திக் கொள்வதற்காக திணைக்களத்தின் மூலம் வட்டி உதவித் தொகை இலங்கை வங்கிக்கு செலுத்துதல் தற்காலிகமாக கைவிடல், திணைக்களத்தின் மூலம் கடன் கொடுத்தோருக்கு அறிவித்து எச்சரிக்கைக் கடிதம் அனுப்புதல், சகல மாவட்ட அலுவலகங்களுக்கும் அறிவித்து கள உத்தியோகத்தர்கள் ஊடாக கடன்கொடுத்தோர்களுக்கு அறிவித்தல், இலங்கை வங்கிக்குரிய கடன் நலனாளிகள் தொடர்பாக விரிவான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் கடன் கொடுத்தோர்களுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை தொடர்பான விடயங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன் உத்தேச திட்டம் தொடர்பாக சரியான தவல்கள் பேணிச்செல்ல வேண்டியிருந்ததுடன் கோருகின்ற போது அந்தத் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்ததுடன் இதுவரை செலுத்தப்பட் டிருந்த வட்டி உதவித் தொகை சரியாக கணிப்பிடுவதற்கு தேவையான தகவல்கள் கணக்காய்விறகு சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே திணைக்களத்தால் கடன் கொடுத்தோர்களிடமிருந்து கடன் தவணைப் பணத்தை அறவிடல், தீர்க்கப்படாதுள்ள மீதிகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய பதிவேடு அல்லது தரவு முறைமை யொன்று பேணிச்செல்லாமையினால் வட்டி உதவித் தொகையினைச் செலுத்துவதற்கு எஞ்சியுள்ள கடன் தொகை, செலுத்துவதற்குள்ள வட்டி மற்றும் செலுத்தி பூர்த்தி செய்த கடனாளிகள் யார் என்பது தொடர்பாக இனங்காண்பதற்கு தேவையான தவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் இந்தக் கொடுக்கல் வாங்கல்களின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும் வங்கி ஆவணங்களின் பிரகாரம் 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் வழங்கப்பட்ட கடன் மீதி ரூபா 776,515,188 ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 24 ஆம் திகதிய 2255/22 என்ற அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவிடும் கட்டளையின் பிரகாரம் 05 பிரதான செயற்பாடுகளின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கக்கூடிய 53 சந்தர்ப்பங்களுக்காக அரச வருமானத்தை சேகரிப்பதற்காக கட்டணத்தை விதிப்பதற்கு உரிய கட்டளை அமைச்சரால் விநியோகிக்கப் பட்டிருந்தது. எனினும் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது முன்னைய இலக்கத்துடன் விஷேட காகிதாதி அனுமதிப்பத்திரம் விநியோகிக்காமையினால் அரசாங்கத்திற்கு வருமானம் ஒன்று காணப்படாத அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கான சந்தர்ப்பம் | 2021 நவம்பர் 24 ஆம் திகதிய இலக்கம் 2255/22 என்ற அதிவிஷேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள முறையில் 53 சந்தர்ப்பங்களின் கீழ் வருமானம் சேகரிக்கப்படுகின்றது. அந்த சேகரிக்கப்படுகின்ற வருமானத்திற்குரிய அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் முகாமைத்துவ பிரிவு, தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு, அபிவிருத்தி பிரிவு மற்றும் செயற்பட்டுப் பிரிவுகளின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் எமது திணைக்களம் வங்கி கணக்கிற்கு சேரிக்கப்படுகின்ற பணம், ஒவ்வொரு பிரிவிலிருந்தும் விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப்பத்திரங்களின் எண்ணிகையுடன் மாதாந்தம் ஒப்பீடு செய்யப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டு முதல் திணைக்கள வருமானத்தை சேகரித்தல் Online முறைமையில் | அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பதற்காக போதியள வான உள்ளகக் கட்டுப்பாடொன்று அமுல்படுத்தப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| காணப் பட்டதுடன் மீளாய்வாண்டின நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சேகரிக்கப்பட்ட ரூபா 179,170,315 தொகை வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் விநியோகிக்கப்பட்டிருந்த சகல அனுமதிப்பத்திரங்களுக்கும் உரிய வருமானமாக இருந்ததை ஒப்பீடு செய்வதற்கு முடியாமையினால் மேற்கூறப்பட்ட வருடாந்த அனுமதிப்பத்திர கட்டண வருமானத்தில் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | மேற்கொள்ளப்படுகின்றமையால வருமானம் வங்கிக்கு கிடைக்கின்ற மையே உறுதிப்படுத்தி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படுகின்றது. இதனால் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்குரிய சேகரிக்கப்பட்ட வருமானம் இலகுவாக ஒப்பீடு செய்ய முடியுமாக உள்ளது. |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்** | **இணங்காமைகள்** | | |
| நிதிப்பிரமாணம் 756(6) | வருடாந்த பொருள் மெய்மை ஆய்வின் போது திறைசேரி மற்றும் கணிப்பீட்டுச் சபை 66 இல் காணப்படுகின்ற பற்றாக்குறை மற்றும் மிகை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் பொருள் மெய்மை ஆய்வு நடவடிக்கைகள் யூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் நாட்டில் காணப்பட்ட சிக்கலான பொருளாதார நிலைமையினால் 15 மாவட்ட அலுவலகங்களில் 6 மாவட்ட அலுவலகங்களில் மாத்திரம் விற்றுத்தீர்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.3 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு இனங்காணப்படாத பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 1,344,682 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 523,606 பெறுவனவுகள் 13 பெறுவனவுகள் 02 மாதம் முதல் 06 மாதம் வரை இனங்காணப்படாத பெறுவனவுகளில் உள்ளடக்கி இருநத துடன் 2024 மார்ச் 31 ஆம் திகதி வரையில் 02 மாதங்கள் 02 முதல் 06 மாதங்கள் வரையான ரூபா 195,500 ஆன 07 பெறுவனவுகள் தொடர்ந்தும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்படாத பெறுவனவுகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 195,500.00 தொகை நேரடியாக வங்கியிலிடப்பட்ட பெறுவனவாக இருந்ததுடன் அந்த பெறுவனவுகளை இனங்காண்பதற்காக திணைக்களத்தின் 2024.05.20 ஆந் திகதிய கடிதம் மூலம் வருமான சேரித்தல் பிரிவுகளின் தலைவரிடம் விசாரணை செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இனங்காணப்படாத பெறுவனவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| செயலாற்றல் குறிகாட்டிகளாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள திணைக்களத்தால் நாளாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற 76 பணிப்பொறுப்புக்கள் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் எதிர்பார்த்த மற்றும் உள்ளபடியான பூர்த்திகள் ஒப்பீட்டு ரீதியில் இனங்காணப் பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் குறிகாட்டிகளில் எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பூர்த்திகள் ஒப்பீட்டு ரீதியில் இனங்காண்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | செயலாற்றலைக் கணிப்பிடக்கூடிய குறி காட்டிகள் இனங்காணப்படல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவிற்கு ALDFG மற்றும் PELAGIKOS என்ற செயற்திட்டம் மூலம் கிடைக்கப் பெற்ற 161 டெப் இயந்திரங்களின் எண்ணிக்கையில் நீர்கொழும்பு மாவட்ட அலுவலகத்திற்கு 16 | நீர்கொழும்பு மாவட்ட கடற்றொழில் அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட 16 இயந்திரங்கள் அந்த மாவட்ட | திணைக்களத்திற்கு கிடைக்கின்ற சகல பொருட் பதிவேட்டு விடயங்களும் பொருட் பதிவேட்டில் |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டிருந்தது. அலுவலக உத்தியோகத்தர்களுக்கு இந்த டெப் இயந்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த டெப் இயந்திரங்கள் பொது 47 பொருட் பதிவேட்டுப் புத்தகத்தில் சரியாக உள்ளடக்கப்படாதிருந்ததுடன் வருடாந்த பொருள் மெய்மை ஆய்வின் போது மேற்கூறப்பட்ட 16 டெப் இயந்திரங்களும் மெய்மை ஆய்விற்கு உட்படுத்தப்படாதிருந்தமையால் இந்த டெப் இயந்திரங்களின் இருப்பை உறுதிப்படுத்த முடியவில்லை. | கடற்றொழில் அலுவலகத்தில் பொது 44 பொருட் பதிவேட்டில் உள்ளடக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த டெப் இயந்திரங்களுக்குரிய உரிய உத்தியோகத்தர்கள் பொறுப்பில் காணப்படுகின்றமையால் பொருள் மெய்மை ஆய்விற்கு உட்படுத்தப்படவில்லை. | உள்ளடக்க வேண்டியிருந்த துடன் அந்த பொருட் பதிவேட்டு பொருட்கள் தொடர்பாக வருடாந்த மெய்மை ஆய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.3 நட்டம் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் இணைப்பு (i) நட்டம் மற்றும் கைவிடல் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 16,519,961 ஆன அமைச்சின் கட்டிடத்தின் 06 ஆவது மாடியில் நீர் கசிவு ஏற்பட்டமையில் ஏற்பட்ட பாதிப்பு திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகின்ற நட்டப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவிலை. இதன் பிரகாரம் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் நட்டத்திற்குப் பொறுப்புவாய்ந்த தரப்பினர் தெளிவாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 பரிசோதனைகள் மேற்கொள்வதற்காக அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட ஆலோசனையின் படி குழுவொன்று நியமிக்கப்பட்டு நிதிப்பிரமாணம் 104 பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அமைச்சு மீளாய்வுக்குழு ஊடாக நிதிப்பிரமாணம் 104 குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்ட பாதிப்பு தொடர்பாக பரிந்துரை வழங்கப்பட்ட பின்னர் இழப்பு மற்றும் நட்டப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு முடியும். அமைச்சின் பரிந்துரை இன்னும் திணைக்களத்திற்கு வழங்கப்படாதிருந்ததை மேலும் அறியத்தருகின்றோம். | நட்டம் மற்றும் இழப்புப் பதிவேடு நாளாதுவரையாக பேணிச்செல்லப்பட வேண்டும். |

### 3.4 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் (உ) உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான பிரகாரம் குறித்துரைத்த காலப் பகுதியில் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பரிலளிக்க வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டிற்காக விநியோகிக்கப்பட்ட 08 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2024 ஆகஸ்ட் 12 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டிற்காக விநியோகிக்கப்பட்டு இதுவரை பதிலளிக்கப்படாத 08 கணக்காய்வு ஐயவினாக்களுக்காக விரைவாக பதிலளிக்குமாறு உரிய உத்தியோகத் தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | குறித்துரைத்த காலத்தில் கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதிலளிக்கப்படல் வேண்டும். |

### 3.5 முகாமைத்தவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) (i) | ஆழமான கடற்பிரதேசத்தில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மீனவப் படகுகளை அவதானித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கான 4,200 உபகரண தொகுதிகள் அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் மானியமாக வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த உபகரணத் தொகுதிகளில் ஒரு கப்பலில் பொருத்தும் செலவினம் அமெரிக் டொலர் 45 ஆகும். அந்த தொகை உபகரணத் தொகுதியொன்றை பொருத்தும் ஒப்பந்தத்தை வழங்கியிருந்த உள் நாட்டு கம்பனிக்கு செலுத்தவேண்டியிருந்தது. எனினும் கேள்வி நியதிகளின் பிரகாரம் கப்பல் அவதானிப்பு முறைமை 200 இற்குரிய வழங்குநர்களினால் கடந்த தினங்களில் 200 மீன்பிடி கப்பல்களில் இலவசமாக பொருத்துதல் வேண்டும். எனினும் 2020 திசம்பர் 31 ஆம் திகதியின் பின்னர் பதிவு செய்த / உற்பத்தி செய்யப்படுகின்ற படகுகளுக்காக VMS உபகரணங்கள் உரிய படகு உரிமையாளர்களால் பொருத்தவேண்டியிருந்தமைக்கு அரசாங்கம் தீர்மானித்திருந்த போதிலும் மேற்குறிப்பிடப்பட்ட திகதியின் பின்னர் பொருத்தப் பட்ட 27 படகுகளுக்காகவும் உரிய இயந்திரம் இலவசமாக பொருத்தப்பட்டிருந்ததா என்பது தொடர்பாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள திணைக்களத்தால் மேற்பார்வையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 2020.12.31 இன் பின்னர் பதிவு செய்யப்பட்ட 27 கப்பல்கள் திணைக்கள முகாமைத்துவத்தினால் இனங் காணப்பட்டதுடன் தற்போது அது தொடர்பாக உள்ளகப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. | VMS உபகரணம் பொருத்துவதற்காக உரிய திட்டமுறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | பலநாள் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக திணைக்களத்தில் பதிவு செய்திருந்த படகுகளை பட்டியலில் பதிவு செய்யப்பட்ட திகதி குறிப்பிடப்படாதிருந்த 60 படகுகளுக்க ளுக்காக VMS இயந்திரம் பணம் அறவிட்ட பின்னர் பொருத்தப்பட்டிருந்தது. அவ்வாறே கடற்றொழில் மற்றும் நீரியல்வள திணைக்களத்தின் தரவு முறைமையை நாளதுவரையாக பேணிச்செல்லாமையினால் இந்தப் படகுகள் 2020 திசம்பர் 31 ஆம் திகதியின் பின்னர் பதிவு செய்த / உற்பத்தி செய்யப்படுகின்ற படகுகளா என்பதை உறுதிப்படுத்தலை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இந்த 60 மீன்பிடி கப்பல்கள் 2020.12.31 இல் உள்ளவாறு திகதியின் பின்னர் ஆரம்ப பதிவு மேற்கொண்ட கப்பல்களாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பணம் அறவிட்டு VMS இயந்திரம் பொருத்துதல் சரியானதாகும். அவ்வாறே திணைக்களத்தின் தரவு முறைமையை நாளதுவரையாக பேணிச்செல்வதற்காக 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டின் போது மீன்பிடிக் கப்பல்களை பதிவு செய்தல் மேற்கொள்கின்ற முகாமைத்துவ பிரிவு பேணிச்செல்கின்ற பொது 62 பதிவேடு MSDFAR முறைமையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. தற்போது தரவு முறைமை நாளதுவரையாக்கப் படுகின்றது. | திணைக்கள தரவு முறைமை நாளதுவரையாக பேணிச்செல்லப்படல் வேண்டும். |
| (iii) | இலங்கையில் பதிவு செய்த தனியார் கம்பனி ஒன்றினால் மீன்பிடித்தல் நடவடிக்கை களுக்காக கொண்டுவரப்பட்ட திக்கோவிட்ட துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வெளிநாடுகளுக்கு உரிய 18 மீன்பிடிக் கப்பல்கள் கடந்த நாட்களில் மீன்பிடி நடவடிக்கை களுக்காக திணைக்களத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந்த கப்பல்கள் நீண்ட நாட்களாக மீன்பிடி தொழிலில் ஈடுபடாதிருந்தததுடன் அந்த கப்பல்களுக்காக VMS இயந்திரம் பொருத்தப்பட்டிருக்கவில்லை. VMS இயந்திரம் பொருத்தப்படாத இந்தக் கப்பல்கள் சில சந்தர்ப்பங்களின் போது துறைமுகத்திற்கு வெளியே ஆழமான கடற் பிரதேசத்தில் பயனித்த போதிலும் அந்த கப்பல்களில் ஆழமான கடல் பிரதேசத்தில் மீன்பிடிகள் தொடர்பான தகவல்கள் திணைக்களத்திடம் காணப்படவில்லை. இதன் பிரகாரம் திணைக்களத்தில் | இந்த கப்பல்கள் இலங்கைக்கு எடுத்துவரப்படுகின்ற சந்தர்ப்பம் வரையிலும் இந்தக் கப்பல் கம்பனியால் பொருத்தப்பட்ட VMS இயந்திரத்துடன் செட்டலைட் இணைப்பு செயற்படுத்தப் படுவதுடன் அந்த இயந்திரங்களின் மேற்பார்வை வசதிகள் மற்றும் அதிகார பலம் அந்தக் கம்பனியினால் இலங்கை கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் திணைக்களத்தின் கப்பல் அவதானிப்பு நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இருபத்துநான்கு மணித்தியாலம் முழுவதும் அந்தக் கப்பல் மேற்பார்வை செய்யும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் அந்தக் கப்பலினால் எடுத்துக் செல்லப்படுகின்றது. சகல மீன்கள் தொடர்பான தகவல்கள் செய்மைதித் தரவு தகவல்களின் அடிப்படையில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் இன்றி பிடிக்கப்பட்ட மீன்களை உறுதிப்படுத்துதல் மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் பொருளாதார நெருக்கடி யுடன் அந்த இயந்திரம் | வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்களுக்கு மீன்பிடி செயற்பாடு நடவடிக்கைகள் தொடர்பாக ஒழுங்குபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதிவு செய்த ஏனைய மீன்பிடி VMS கப்பல்களுக்காக உரித்தான சட்டரீதியான நிலைமைக்குப் புறம்பாக நடவடிக்கை எடுப்பதற்கு தனியார் கம்பனிக்குரிய வெளிநாட்டு மீன்பிடி கப்பலுக்காக சந்தர்ப்பம் வழங்குவதன் மூலம் அந்த VMS மீன்பிடிக் கப்பல்களில் மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாக திணைக்களத்தின் மேற்பார்வை கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது. | கப்பல்களில் மேற்கொள்ளப்பட்ட மீன்பிடி நடவடிக்கைகள் நிறுத்தப் பட்டமையால் கப்பல்கள் நீண்டகாலம் முதல் திக்கோவிட்ட துறைமுகத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்தது. | |
| (iv) | இலக்கம் IMULA-0140-CBO இன் கீழ் திணைக்களத்தில் பதிவு செய்திருந்த வெளிநாட்டு பலநாள் மீன்பிடி கப்பல்கள் 2022 மே 19 திகதி திக்கோவிட்ட துறைமுகத்தில் இருந்து மீன்பிடி நடவடிக்கைக்காக வெளிச்சென்று இருந்ததுடன், மீண்டும் 2022 யூலை 04 திகதி துறைமுகத்திற்கு மீள வருகை தந்திருந்தது. எனினும் அதற்குரிய சம்பவத் திரட்டு குறிப்புக்கள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படாது இருந்ததுடன் திணைக்களத்தால் திக்கோதிக்கோவிட்ட அலுவலகத்தில் பல நாள் மீன்பிடி கப்பல்கள் மீண்டும் வருகை தரும் பதிவேட்டில் மீன்பிடி செயற்பாட்டு நடவடிக்கைகள் இன்றி இருப்பதாக (Non Operation) ஆக குறிப்பிடபட்டிருந்தது. இவ்வாறு 46 நாட்களுக்குப் பின்னர் ஆழ்கடலில் கப்பல் ஈடுபட்டு மீள மீன்பிடித்தலில் ஈடுபட்டு மீண்டும் வருகை தந்த மீன்பிடி கப்பல்களில் மேற்கொள்ளப்பட்ட மீன்பிடி நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பாக திணைக்களத்தின் மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | IMULA-0140-CBO மீன்பிடி கப்பல்கள் 2022 மே மாதம் 19 ஆம் திகதி மீன்பிடி செயற்பா நடவடிக்கைகளுக்காக திக்கோவிட்டு மீன்பிடி துறைமுகத்தின் தெற்கு இறங்கு துறையில் இருந்து வெளியேறிச் சென்று மீண்டும் கப்பல் திக்கோடவிட்ட துறைமுகத்திற்கு 2022 யூன் மாதம் 24 ஆம் திகதி. மீண்டும் துறைமுகத்திற்கு வருகை தந்திருந்தது. அதன்போது கப்பல் வெளியேறிச் சென்ற பத்து நாட்கள் அளவிலான காலம் கடந்தபின்னர் கப்பலில் ஏற்பட்ட தொழிநுட்ப கோளாறினால் மீன்பிடித்தல் நடவடிக்கைகள் இன்றி 2022 யூன் 24 ஆம் திகதி மீண்டும் துறைமுகத்திற்கு வருகை தந்திருந்தது. திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் சம்பவத்திரட்டு புத்தகம் கையேற்று 2022 யூலை 04 ஆம் திகதி இயந்திரம் வருகைப்பதிவில் குறிப்பிடப்பட்ட நிலையத்தில் மின்வெட்டு காரணமாக ‘‘கப்பல் செயலிழந்தமையின் காரணமாக மீன்பிடிக்க படவில்லை’’ என குறிப்பிடபட்டுள்ளது. | திணைக்களத்தால் இந்த மீன்பிடி கப்பல்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள் நாளது வரையாக முறையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) (i) | 2016 திசம்பர் 20 ஆம் திகதிய இலக்கம் அமப /16/2547/725/020-II என்ற அமைச்சரவை தீர்மானத்தின் படி, அரசாங்கத்தின் 50 சதவீத மானியத்தின் கீழ் 55 நீளத்தையுடைய நவீன தொழிநுட்பத்துடன் 10 மீன்பிடி கப்பல்கள்களை உற்பத்தி செய்வதற்காக ரூபா 130 மில்லியன் தொகை 2016 ஆம் ஆண்டில் திணைக்களத்தால் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. இந்த மானிய முறைமையின் கீழ் நிர்மாணத்து கையளிக்கப்பட்ட 10 மீன்பிடி கப்பல்களில் 02 மீன்பிடி கப்பல்கள் கணக்காய்வு திகதி வரையிலும் 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கலந்திருந்த போதிலும் உற்பத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்து அதன் உரிமையாளர்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இருந்த போதும் திணைக்களத்தால் போதியளவான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | IMUL - A - 0061 KMN மற்றும் IMUL - A - 0062 KMN என்ற இந்த இரண்டு கப்பல்களில் உற்பத்திகள் 2016 ஆம் ஆண்டு வரையில் பூர்த்தி செய்ய வேண்டி இருந்த போதிலும், பல்வேறு காரணங்களின் அடிப்படையில் உற்பத்தியை பூர்த்தி செய்ய முடியாதிருந்ததுடன், முறையே 70 சதவீதம் மற்றும் 10 சதவீதம் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. சீனோா் நிறுவனம் கப்பல் தளம் மற்றும் பல நாள் மீன்பிடி கப்பல் உரிமையாளர்கள் என்ற தரப்பினருடன் கலந்துரையாடி விரைவாக இரண்டு கப்பல்களையும் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அரசாங்கத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் கப்பல் நிர்மாண நடவடிக்கைகள் திணைக்களத்தால் மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். |
| (ii) | 50 சதவீத அரசாங்கத்தின் மானியசெயற்திட்டத்தின் கீழ் மீன்பிடி கப்பல் உற்பத்தி செய்வதற்காக 2016 நவம்பர் 16 ஆம் திகதி நான்கு தரப்பினருடன் உடன்படிக்கை ஒன்று திணைக்களத்தால் கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும் இயந்திர கப்பல் உற்பத்தியின் போது ஏற்படுகின்ற கால தாமதம் தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு போதியளவான நிதி ஏற்பாடுகள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. அதன் பிரகாரம் அரசாங்கத்தின் பணத்தை செலவிடும் போது கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிதிப்பிரமாணம் 156(7) இன் பிரகாரம். சிக்கனமான தன்மை தொடர்பாக கவனம்செலுத்தி செலவினம் செய்ய வேண்டி இருந்தமை தெளிவாக குறிப்பிடப்பட்ட போதிலும் இந்த கப்பல் உற்பத்தியை பேணி செல்வதற்காக கொடுப்பனவு செய்யும் போது அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நான்கு தரப்பினரின் உடன்படிக்கைகளில் குறைபாடுகளுடன் தயாரிக்க பட்டிருந்த ஏற்றுக்கொள்கின்றோம். சீனோர் நீர் நிறுவனம், கப்பல் தளம் மற்றும் பல நாள் மீன்பிடி கப்பல் உரிமையாள. ஆளர்கள் என்ற தரப்பினருடன் தொடர்பு படுத்தி அரசாங்கத்துக்கு நட்டமொன்று ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்காக திணைக்களம் தற்போது செயற்படுகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் சிக்கலான தன்மை தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 50 சத வீத அரசாங்கத்தின் மானியத்தின் அடிப்படையில் உற்பத்தி செய்யப்பட்ட இலக்கம் IMUL-A-0844 CHW என்ற மீன்பிடி கப்பல் 2018 மார்ச் 22 திகதி மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கடல் பிரயாணத்தின் போது தீப்பிடித்து அழிவடைந்தருந்தது. அதன் பிரகாரம் மானியத்தின் கீழ் கப்பல் உற்பத்தி மீன்பிடி கப்பல் வழங்குவதன் மூலம் தரத்தன் தரமான உள்நாட்டு மீன்பிடித்தலை அதிகரிக்கும் அமைச்சரவை நோக்கம் நிறைவேற்றப்பட இருக்கவில்லை. எனினும் இந்த கப்பல் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. அத்துடன் அழிவிற்கு உட்பட்ட கப்பலுக்காக ரூபா 29,138,241 இழப்பீட்டுத் தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த முழுமையான இழப்பீட்டு தொகையும், அந்த மீன்பிடி கப்பல் உற்பத்தி செய்வதற்காக 50 சத வீத பங்களிப்பு வழங்கியிருந்த. கப்பல் பொறுப்பாளருக்கு செலுத்துமாறு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் 2018 ஆகஸ்ட் 06 ஆம் திகதி காப்புறுதி காப்புறுதி கூட்டுத்தாபனத்துக்கு கடிதமொன்றின் மூலம் அறிவிக்கபட்டிருந்தது. அதன் பிரகாரம் கப்பல் உற்பத்திக்காக அரசாங்கத்தால் செலுத்தப்பட்ட ரூபா 14,500,000 தொகை மீள அறவிடப்படாதிருந்ததுடன் அந்த தொகையும் கப்பல் பொறுப்பாளருக்கு வழங்கியதன் மூலம் அரசாங்கத்திற்கு நிதிரீதியான நட்டம் ஏற்பட்டிருந்தது. | 50 சத வீத அரசாங்கத்தின் மானியத்தின் அடிப்படையில் உற்பத்தி செய்யப்பட்ட IMUL-A-0844 CHW இலக்கு என்ற கப்பலில் தீப்பிடித்து அழிவடைந்ததன் காரணமாக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திலிருந்து கிடைத்த இழப்பீட்டு தொகை அந்த கப்பலின் நலனாளிக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கபடும். | கப்பல் நிர்மாணத்திற்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பங்களிப்புத் தொகை அரசாங்கத்துக்கு உரித்தற்றமை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | குடா அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குடா எல்லைகளை அடையாளப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் சிலாபம் குடாவின் எல்லை இனை அடையாளப்படுத்துவதற்காக தேவையான எல்லை தூண்களின் எண்ணிக்கை 1784 ஆக இருந்த போதிலும் பெறுகை செயற்பாடுகளின் போது 4060 தூண்கள் எண்ணிக்கை ஆக குறிப்பிடபட்டமையினால் | மதிப்பீடு தயாரிக்கும்போது ஏற்பட்டிருந்த தாமத வழுக்கலினால். மேலதிகமாக கொள்வனவு செய்யப்பட்ட 2276 தூண்கள் புத்தளம் குடா விற்கு மீண்டும் கொண்டுசெல்லப்பட்டு புத்தளம் குடா வில் எல்லை அடையாளப் படுவதற்காக பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | மேலதிகமாக கொள்வனவு செய்யப்பட்ட தூண்களின் செலவினம் மற்றும் மேலதிகமாக செலவிட வேண்டி ஏற்பட்டிருந்த போக்குவரத்து செலவினம் என்பவற்றை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலதிகமாக வழங்கப்பட்ட ரூபா 3,826,639 ஆன முப்பத்தொன்பது ஆன 2276 தூண்கள் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சிலாபம் குடாவில் 13 இடங்களில் குவித்து வைக்கபட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 128(1)(ஒ) இன் பிரகாரம் பொதுமக்களின் பணத்தை செலவிடும் போது. சிக்கனமாகவும். மற்றும் செயற்திறனாகவும் முறையாகவும். உண்மையாகவும் செலவிடுதல் தொடர்பாக. கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டி இருந்தமை. குறிப்பிடப்பட்ட போதிலும் அதில் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட இருக்கவில்லை. | | |
| (உ) | அறுகம்பை குடா வில் எல்லை அடையாளம் இடுவதற்காக 1048 அடையாளமிடும் தூண்கள் உற்பத்தி செய்யப்பட்டு இருந்த போதிலும். 420 எல்லை தூண்கள் குடாவை சுற்றி அமைக்கபட்டு இருந்ததுடன் அதில் 90 எல்லை தூண்கள் இனங்காண முடியாதவர்களால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தமை அறிவிக்கபட்டிருந்தது. 90 எல்லை தூண்கள் நிர்மானிப்பதற்கும் மற்றும் ஸ்தாபிப்பதற்கு அண்ணளவாக ரூபா 222,300 தொகை அரசாங்கத்துக்கு அரசாங்கத்தால் செலவிடப்பட்டு இருந்ததுடன், அந்த இழப்பு மற்றும் நட்டம் தொடர்பாக நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. மேலும் அவ்வாறு கழற்றி அகற்றப்பட்ட எல்லை தூண்களுக்காக மீண்டும் தூண்களை அமைத்தல் மற்றும் எஞ்சியிருந்த எல்லை தூண்கள் 628 அளவன்று குடா எல்லை அளவிடும் அடையாளம் இடுவதற்காக ஸ்தாபித்தல். 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சிவில் பாதுகாப்பு திணைக்களத்தால் அறுகம்பே குடாவில் 420 எல்லை தூண்கள் அமைக்கப்பட்டு இருந்ததுடன் இந்த எல்லை தூண்களுக்கிடையே 90 தூண்கள். இனந்தெரியாத நபர்களினால் கழற்றி அகற்றப்பட்டிருந்தது. இது தொடர்பாக பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் 2020.09.18 திகதி முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. | அரசாங்கத்துக்கு ஏற்படுகின்ற ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவிடவேண்டி இருந்ததுடன் மிகுதியை தூண்கள் குடா எல்லையில் அடையாளம் இடுவதற்கு பயன்படுத்தப்படல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் / நோக்கங்கள் இனங்காணும் போது அவற்றை குறித்துரைத்த மற்றும் அளவிடக்கூடிய முறையில் இனங்காணாதிருந்த துடன் அடைந்து கொள்ளப்பட்ட குறிகாட்டிகள் எண்ணிக்கை ரீதியில் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காண வேண்டியிருந்ததுடன் வெற்றியடைந்த குறிகாட்டிகள் இனங்காணப்படல் வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கடற்றொழில் மற்றும் நீரியில் வளத்திணைக்களத்தின் சிரேஷ்ட நிலையில் 10 பதவிகளுக்குரிய 19 வெற்றிடங்களும், மூன்றாம் நிலையில் 02 பதவிகளுக்குரிய 10 வெற்றிடங்களும், இரண்டாம் நிலையில் 08 பதவிகளுக்குரிய 223 வெற்றிடங்களும், ஆரம்ப நிலையில் 02 பதவிகளுக்குரிய 05 வெற்றிடங்களும் காணப்பட்டன. அதன் பிரகாரம் சிரேஷ்ட நிலையினை உள்ளடக்கிய பதவிகளில் கணிசமான எண்ணிக்கையில் வெற்றிடம் காணப்பட்டமை திணைக்களத்தின் பிரதான பணிகளை நிறைவேற்றும் போது இடையூறாக இருந்தது. | நியமனம் மேற்கொள்வதற்கும் நியமனங்களை வழங்குவதற்கும், ஆட்சேர்ப்பதற்கும் போட்டிப் பரீட்சை நடாத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஏனைய உத்தியோகத்தர்களால் உரிய பதவிகளின் கடமைகள் நிறைவேற்றப்படுகின்றது. | திணைக்களத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தேவையான பதவியணியினர் சேர்க்கப் படல் வேண்டும். |